**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 8 /2019**

பிரதிவாதி தரப்பு சாட்சியாக DW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குருமூர்த்தி | Father Name | : | சீனிவாசன் |
| Village | : | கோவில்பத்து,<br>கீழத்தெரு | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 45 |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும், 340/1B உட்பிரிவு 4 என்ற புல எண் மட்டும்தான். கடந்த 20.12.1950ல் எனது பாட்டியார் மாரியாயி தாவா சொத்துக்களை விலைக்கு வாங்கியதாக தான் எனது வழக்கு என்று எதிருரையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். வழக்கு எதிருரையுடன் மேற்படி கிரய ஆவணத்தின் நகலினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ. 8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ 8 ஆவணத்தில் எனது பாட்டி மாரியாயி வாங்கியதாக சொல்லப்படும் சொத்தின் புல எண். 340/7 சென்ட் 11 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் அடிப்படையில் இந்த ஆவணத்தில் கண்ட சொத்துக்களில் தான் நாங்கள் 70 வருடங்களாக அனுபவித்து வருகிறோம் என்று எதிருரையில் கூறி கட்சி செய்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு தென்புறம் நாங்கள் வாங்கியதாக கூறும் புல எண்.340/7 உள்ளது என்று சொன்னால் சரிதான். வாதிகளின் தகப்பனாரின் பெயர் ரங்கசாமி

என்றால் சரிதான். வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 கடந்த 03.05.1978 அன்று புல எண் 340/1 வாதிகளின் தகப்பனார் ரங்கசாமியால் வாங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கடந்த 02.04.1978 அன்று புல எண் 340/2 வாதிகளின் தகப்பனார் ரங்கசாமியால் வாங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். புல எண்கள் 340/1 என்பது புல எண்கள் 340/1b -1, 340/1b – 2, 340/1b -3, 340/1b -4 என்றும் புல எண் 340/2 என்பது புல எண்கள் 340/2b , 340/2c , 340/2d என்று உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆகியிருக்கலாம். நான் அந்த பத்திரத்தை பார்க்கவில்லை. வா.சா.ஆ. 5 ல் மேற்கண்டவாறு உட்பிரிவு செய்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ரங்கசாமி தற்சமயம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள்தான் வாதிகள் என்றால் சரிதான். வாதிகள் வழக்குரையுடன் வரைபடம் தாக்கல் செய்துள்ளதை நான் பார்க்கவில்லை. வரைபடத்தில் புல எண்கள் 340/2b, 340/1b-2, 340/1b-4 ஆகியவை பாதைகளாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதில் புல எண் 340/1b-4 மட்டும்தான் எங்களுக்கான பாதையாகும். புல எண் 340/1b-4 மட்டும்தான் எங்களுக்கான பாதை என்று குறிப்பிடுவதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி புல எண் 340/1b-4 வாதிகளின் பெயரில்தான் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் மற்றும் பாதையாக விடப்பட்ட சொத்துகளும் வாதிகளுக்கு சொந்தமானது என்றும் அவர்களது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் அதனை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. புல எண் 340/1b-2, 340/1b-4, 340/2b ஆகிய சொத்துக்களை வாதிகள் தான் எங்களது வசதிக்காகவும் நாங்கள் சென்று வரவும் பாதையாக எங்களுக்கு பயன்படுத்த அனுமதித்துள்ளார் என்றால் எங்கள் அனுபவத்தில் இருந்தது அவர்கள் இடையில்தான் வாங்கினார்கள், பின்னர் பிரச்சனை செய்கிறார்கள். வாதிகள் பழைய புல எண்கள் 340/1, 340/2 ல் அடங்கிய முழு சொத்தினையும் 1978 - லேயே வாங்கி அனுபவித்து வந்தார்கள் என்றும் பின்னர்

பாதைக்காக புல எண் 340/1b-2, 340/1b-4, 340/2b வழங்கினார்கள் என்றும் நான் வழக்கிற்காக தற்சமயம் அவைகளை மறுத்து வாதிகள் பிரச்சனை செய்கிறார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தென்புறத்தில் நாங்கள் குடியிருக்கிறோம் என்றாலும் வடப்புறத்தில் உள்ள வாதிகளுக்கு சொந்தமான தாவா சொத்துக்களை விற்பனை கேட்டு கொடுக்காததால் விரோதம் கொண்டு அவர்களின் அனுபவத்தில் தொடர்ந்து தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரச்சனை எதுவும் செய்யவில்லை பாதை மட்டும்தான் கேட்டோம். 27.02.2019 வாதிகள் நில அளவையருக்கு பணம் செலுத்தி நிலத்தை அளவீடு செய்ய நில அளவையர்கள் வந்தபோது அவர்களை மறித்து அளவீடு செய்ய விடாமல் செய்தோம் என்றால் சரியல்ல. நான் அச்சமயம் வீட்டில் இல்லை. வாதிகள் தாவா சொத்தில் மாட்டுக்கொட்டகை மற்றும் தட்டு முட்டு சாமான்கள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மணல், சல்லி ஆகியவற்றை சேமித்து வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, மாட்டுக்கொட்டகை உள்ளது அதனை நாங்கள் தான் வைத்திருந்தோம். தற்சமயம் அதனை பிரித்து விட்டார்கள். மாட்டுக்கொட்டகை எங்களுடையது அதனை அவர்கள் பிரித்துவிட்டார்கள் என்றும் தற்சமயம் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தில் மாட்டுக்கொட்டகை இருந்ததாகவோ அதனை வாதிகள் பிரித்துவிட்டதாகவோ எனது வழக்கு எதிருரையிலோ முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். மாட்டுக் கொட்டகை எனக்கு சொந்தமானது இல்லை என்பதால்தான் நான் எனது எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதிகளாகிய நாங்கள்தான தாவா சொத்தினை வேலி வைத்து ஆக்கிரமிக்க முயற்சி செய்தோம் என்றால் அதனால்தான் அதனை தடுக்க வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, வேலியும் மாட்டுக்கொட்டகையும் ஏற்கனவே இருந்தது. வேலியும் மாட்டுக்கொட்டகையும் ஏற்கனவே இருந்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் குடியிருப்பதாக சொல்லி தாக்கல் செய்துள்ள பி.வா.சா.1 ல் வீட்டு வரி ரசீதுகள் எனது பாட்டி மாரியாயி கிரயம் வாங்கிய சொத்தில் உள்ள வீட்டிற்கான ரசீதுகள் என்றால்

சரிதான். கோவில்பத்து என்பதும் நீத்துக்கார தெருவும் வெவ்வேறானது என்றால் சரிதான். ரசீதுகளில் 13.03.2019 தேதியிட்ட ரசீது நீத்துக்காரத்தெரு முகவரிக்கு உள்ளது என்றால் சரிதான், அது தவறுதலாக இணைக்கப்பட்டுள்ளது. எனது பாட்டியின் பெயர் மாரியம்மாள் அவரை மாரியாயி என்றும் அழைப்போம் என்றால் சரிதான். (வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.08.04 17:35:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.